நவம்பர்

11. தவிர்க்க முடியாப் பாதை

முன்னுரை

திருச்சிலுவைப் பாதை மீட்பின் பாதை என்பதில் ஐயமில்லை. நம்மை மனந்திரும்பலுக்கு அழைக்கும் ஒரு பாதை என்பதிலும் சந்தேகமேயில்லை. நம் சமுதாயக்கடமைகளை நமக்கு எடுத்துரைக்கும் சாதனமாகவும் அது அமைகிறது உண்மைதான். ஆனால் இன்னொரு பேருண்மையை நாம் உணரத் தவறி விடுகிறோம் என்றுதான் சொல்ல வேண்டும். சிலுவைப் பாதைதான், இயேசு இவ்வுலகில் மனிதனாக மேற்கொண்ட கடைசிப் பயணம். மனிதராய்ப் பிறந்த, அனைவருக்கும் இவ்வுலகில் இறுதியாத்திரை என்று ஒன்று வரும் என்பதை நினைப்பதற்கே கூட பயமாகத்தான் உள்ளது இல்லையா! இறைமகன் இயேசுவுக்கே தவிர்க்க முடியாததாய் அமைந்த இந்தப் பயணம் நம்மாலும் தவிர்க்க முடியாத ஒரு பயணம். படித்தவன், படிக்காதவன், செல்வந்தன், ஏழை ஆண், பெண், அதிகாரம் படைத்தவன், அதிகாரம் அற்றவன் என யாராக இருந்தாலும் தவிர்க்க முடியாத ஒன்று மரணம் என்கிற நிச்சயமான நிகழ்வு. யாரையும் அச்சுறுத்துவது இந்தத் திருச்சிலுவைப் பாதையின் நோக்கமல்ல. எனவே, நான் என் மரணத்தையும், என் இறுதி ஊர்வலத்தையும் பற்றிச் செய்கிற உரத்த சிந்தனையே இது. வாருங்கள், என்னோடு சேர்ந்து தியானியுங்கள். நமக்கு முன்பாகவே, இயேசு எப்படிச் சாவை எதிர்கொண்டு, அதன்மீது வெற்றியும் கொண்டார் என்பதை இந்தத் திருச்சிலுவைப் பாதை நிலைகளில் தியானிப்போம்.

◆

✦ **முதல் நிலை**

இயேசு சாவுக்கு தீர்ப்பிடப்படுகிறார்

“மரணத் தண்டனைக்குரிய குற்றம் ஒன்றும் இவனிடம் நான் காணவில்லை” என அறிக்கையிட்ட பிலாத்து, இயேசுவை விடுவிக்க வழிதேடித் தோற்றுப்போனவனாய் சாவுக்குத்

தீர்ப்பிடுகிறான். இயேசுவுக்கு மரண தண்டனை என்கிற செய்தி காட்டுத் தீயெனப் பரவிற்று, சிலர் பதறினர், சிலர் பரிதவித்தனர். சிலர் பரிகசிக்கவும் செய்தனர். காலத்தின் கட்டாயமாக நிகழ்ந்த இச்சம்பவம் எனக்கு ஒன்றை ஞாபகப்படுத்துகிறது.

ஒரு நாள் வரும். என்னைப் பற்றிய செய்தி ஊரெல்லாம் பரவும். "நிஜமாவா சொல்றீங்க? நேத்து நல்லா இருந்தாரே! திடீர்னு எப்படி?" என்று அடுக்கடுக்கான கேள்விகள் எழும்பும். நான் இறந்து விட்டேன் என்கிற செய்தி சிலரை மீளாத் துயரில் ஆழ்த்தும். சிலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தும். வேறு சிலருக்கு வெறும் தகவலாக அமையும்.

என்னைப் பற்றிய விமர்சனங்களும், மதிப்பீடுகளும், புகழாரங்களும், ஏன் வசைமொழிகளும்கூட வெகுவாகவே பேசப்பட்டு காற்றில் கலக்கும். ஆனால் அவை ஒன்றும் என் காதில் விழாது. என் காதுகளால், நான் கேட்கப் போவது என் நித்திய வாழ்வை நிர்ணயிக்கப்போகும் ஒரு தீர்ப்பை மட்டும்தான். அது "வாரும். என் தந்தையால் ஆசி பெற்றவரே! தொடக்க முதல் உங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள்" (மத். 25:34) என்கிற ஆசியுரையாய் இருக்குமா? இல்லையேல் "சபிக்கப்பட்டவர்களே, என்னிடமிருந்து அகன்று போங்கள்" (மத். 25:41) என்கிற கடுஞ்சொற்களாக இருக்குமா?

தந்தையின் ஆசிமொழி என் காதுகளில் ஒலிக்க வேண்டும் என்பதற்காகவே அநியாயத் தீர்ப்பை, பரபாசுக்காக மட்டுமல்ல, என் விடுதலைக்காகவும் ஏற்றுக் கொண்டவர் இயேசு. நான் எப்படி வேண்டுமானாலும் மரிக்கலாம். அது இயற்கை மரணமாக இருக்கலாம், விபத்தில் சிக்கி மடியும் விபரீத மரணமாகவும் இருக்கலாம். நீண்டநாள் நோய்க்குப்பின் நேரலாம், அல்லது நினையாத நேரத்தில் மாரடைப்பால் நிகழலாம். எங்கே, எப்படி, என்று சாகப்போகிறேன் என்பது என்கையில் இல்லை. ஆனால், எப்படி வாழ்ந்து வருகிறேன் என்பது என் கையில் தான் உள்ளது. மரணத்திற்குப் பின்

நான் பெறப்போகும் நிலைவாழ்வு மரணத்திற்கு முன் நான் வாழும் இவ்வுலக வாழ்வைப் பொறுத்தே அமையும் என்பதை உணர்ந்து நல்லதோர் வாழ்வு வாழ, இந்தத் தலம் எனக்குக் கற்பிக்கட்டும்.

செபம்

எனக்கு, நல்ல தீர்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக அநியாயத் தீர்ப்பை ஏற்றுக் கொண்ட இயேசுவே, என் மரணத்திற்குப்பின் இறைத் தந்தையின் ஆசிமொழியை கேட்கும் வண்ணம், என் வாழ்க்கை ஓர் ஆசியாகவும், பிறருக்கு ஆசீராகவும் அமைய அருள் தாரும்.

◆

✦ **இரண்டாம் நிலை**

பாரமான மரச்சிலுவையை இயேசு சுமக்கிறார்

இயேசு சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு 'மண்டை ஓட்டு இடம்' என்னும் இடத்துக்குச் சென்றார் (யோவா. 19 :17) என்கிற நிகழ்வு எனக்கு நிகழப்போகிற ஒன்றை நினைவூட்டுகிறது. இயேசு மரத்தைச் சுமந்தார். ஒருநாள் வரும். மரம் என்னைச் சுமக்கும். இறந்த என் உடலை ஒரு மரப்பெட்டி தாங்கும். அது சந்தன மரமா, சாதா மரமா, தேக்கு மரமா, தெருவோர மரமா என்பதல்ல முக்கியம். எல்லா மரமும் உளுத்துப்போவது நிச்சயம். ஆனால் நான் எங்கே போகப்போகிறேன் என்பது தான் முக்கியம். மரத்தைச் சுமந்த இயேசு மீட்பின் காரணமானார். தந்தை தமக்குக் கொடுத்த அனைத்துக் கடமைகளையும் நிறைவேற்றி "அன்பார்ந்த மகன்" ஆனார். நான் என்னவாகப் போகிறேன்?

நான் எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்து வருகிறேன்? எதை நோக்கி ஓடிக் கொண்டிருக்கிறேன்? ஒருநாள் என் ஓட்டமெல்லாம் நின்றுவிடும். ஒடுங்கிப்போன சடலமாய்

நான் சாய்ந்திருக்கும்போது என்னைப் பற்றிய பலவிதமான பேச்சுக்கள் எழும். "பொறுப்பான புருஷன், பாசமான அம்மா, கண்ணியமான மனுஷன், கபடமில்லா பெண்" எனச் சொல்வதோடு "இனி என்ன பண்ணுவாங்க அவரு பிள்ளைங்க? இனி எப்படி தலை நிமிரப்போகிறது அந்தக் குடும்பம்? சமூகத்தில் அவர் இடத்தை யார் நிரப்ப முடியும்?" என என் மரணத்தால் ஓர் இழப்பு உணரப்படுமா? இல்லையேல் "விடும்மா, இருந்தும் உனக்கு என்னத்த செஞ்சான்? குடிகாரன் கிட்ட அடிவாங்கினதுதான் மிச்சம். கண்ணத்தொடச்சுட்டு ஆகவேண்டியதப் பாரு?" என்று பேசப்படுமா?

எனது கடமைகள் மற்றும் பொறுப்புகளை கண்ணியமாகச் சுமந்திருந்தால் என் மரணம் இவ்வுலகுக்கு ஒரு இழப்பாக அமையும். இல்லையேல் மக்கள் தொகையில் ஒரு எண்ணிக்கைக் குறைப்பேயன்றி வேறு ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தாது. அதைவிட முக்கியம். என்னைத் தீர்ப்பிட வீற்றிருக்கும் தந்தையின் பார்வையில் நான் எப்படித் தோன்றுவேன். "நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே. சிறியவற்றில் பொறுப்பாய் இருந்தீர்.. உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் பங்கு கொள்ளும்" (மத். 25:21) என்று வரவேற்கப்படுவேனா? அல்லது, "பயனற்ற இந்தப் பணியாளரைப் புறம்பேயுள்ள இருளில் தள்ளுங்கள்" (மத். 25:30) என்கிற தண்டனை பெறுவேனா? அது, இவ்வுலக வாழ்வில், நான் எப்படி என் கடமைகள் மற்றும் பொறுப்புச் சிலுவைகளை சுமக்கிறேன் என்பதைப் பொறுத்தே அமையும் என்பதைப் புரிந்துகொள்ள இந்தத் தலம் எனக்குக் கற்பிக்கட்டும்.

செபம்

சிலுவையைச் சுமந்து சிம்மாசனம் ஏறிய இயேசுவே, அர்த்தம் நிறைந்த வாழ்வையும், பயன் தருகிற வாழ்வையும் வாழ்ந்து, அதன் பலனாகப் பேரின்ப வீட்டில் இடம் பெறுகிற அருளினைத் தாரும்.

◆

இயேசு முதன்முறையாக தரையில் விழுகிறார்

வல்லமையின் தெய்வம் வலிமையிழந்து வீழ்ந்து கிடக்கும் காட்சி எனக்கு நேரிடக்கூடிய ஒன்றை மனத்திரைக்கு கொண்டு வருகிறது. ஒருநாள் வரும் உல்லாசமாய்த் திரியும் நான் உறைந்து போவேன். பெரிதாய் அலட்டிக் கொள்ளும் நான் அசைவின்றிப் போவேன். மீட்பராம் கடவுள் மண்ணில் விழுந்ததுபோல் நானும் மீளாத் தூக்கத்தில் வீழ்வேன். காலத்தை வென்ற கடவுள் கட்டாந்தரையில் கிடப்பது போல நானும் கிடத்தப்படுவேன். இறைமகனாம் இயேசு, மூன்று இடங்களில் விழுந்து கிடந்ததைப்போல, நானும் மூன்று இடங்களில் கிடத்தப்படுவேன். முதல்முறை என் வீட்டு முற்றத்தில்.

அன்றுவரை, என் வீட்டுக்குள் நான் நடந்து வந்திருப்பேன். ஆனால் அன்று என்னை சுமந்து வருவார்கள். அன்றுவரை, என் மக்களும், வாழ்க்கைத் துணையும் எனக்காகக் காத்திருக்க, நானோ என் நண்பர்களோடு குடித்துக் கும்மாளமிட்டு விட்டு மிகத் தாமதமாக வந்து அவர்களை வருத்தியிருப்பேன். இப்போது என் வீட்டிலேயே இருந்துவிட ஆசைப்படுவேன். ஆனால் அது இயலாத காரியமாய் இருக்கும். இயேசுவே! நீர் விழுந்தீர். விழுந்த நீர் எழுந்தீர். தந்தையின் சித்தத்தை நிறைவேற்ற உம் பயணத்தைத் தொடர்ந்தீர். ஆனால் நானோ என் பயணத்தைத் தொடர முடியாதபடி விழுவேன்.

இனி இவ்வுலகிலும் என் வீட்டிலும் எனக்கு இடம் இருக்க முடியாது. வானகத் தந்தையின் இல்லத்திலாவது எனக்கோர் இடம் கிடைக்குமா? "முதல் தரமான ஆடைகளைக் கொண்டு வந்து உடுத்துங்கள்; இவனுடைய கைக்கு மோதிரமும் காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள். நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம்" (லூக். 15:22,23) என வானகம் என் வருகை குறித்து அக்களிக்குமா? அது வாழ்க்கையில் நான்

சென்று கொண்டிருந்த திசையைப் பொறுத்தது. இயேசுவே! நீர்விழுந்தது என்னவோ நிஜம். ஆனால் நீர் பாவத்தில் விழவில்லை, கயமையில் விழவில்லை, இலட்சியத்தில் தோயவில்லை, கடமையில் தோற்கவில்லை. ஆனால் நானோ பாவத்தில் விழுவதையே வாடிக்கையாகக் கொண்டிருந்தேன்.

அறிவு தெளிந்த தனயனாய் நான் புறப்பட்டு என் தந்தையிடம் போவேன். (லூக். 15:19) என மனமாற்றத்தின் பாதையில் என் கால்கள் பயணித்திருந்தால் என்னை வரவேற்க வானகத்தின் வாயில்களும், வானகத் தந்தையின் கரங்களும் அகல விரிந்திருக்கும் என்கிற உண்மையை இந்தத் தலம் எனக்குக் கற்பிக்கட்டும்.

செபம்

விண்ணகத் தந்தையின் வீட்டில் எனக்கு இடம் கிடைத்திட மண்ணில் விழுந்த இயேசுவே, மனம்போன போக்கில் வாழாது, மனம் மாறிய வாழ்க்கை வாழ்ந்து, வானக மகிழ்வில் பங்குபெறக்கூடிய அருளினைத் தாரும்.

◆

✦ **நான்காம் நிலை**

இயேசு தம் தாயை சந்திக்கிறார்

“உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப் பாய்கிற” (லூக். 2:35) நேரம் வந்தது. “உம் மகனை இழுத்துச் செல்கிறார்கள். சுமக்க முடியா சிலுவையைச் சுமந்தவராய், முகம் முழுவதும் இரத்தம் கசிந்தவராய் அவர் தட்டுத் தடுமாறிச் செல்கிறார்” என்கிற செய்தி மரியாவின் செவிகளுக்கு இடிவிழுந்தாற்போல் இருந்திருக்கும். இதயம் இரணமாயிருக்கும். பதைபதைத்த உள்ளத்தோடு அவர் ஓடோடி வந்திருப்பார். ஒருநாள் வரும் நான் இறந்து விட்டேன் என்கிற செய்தியும், என் கடைசிப் பயணத்திற்கான நேரமும் அறிவிக்கப்படும். உள்ளூர், வெளியூர் என எல்லா இடங்களிலிருந்தும் பலர் ஓடோடி வருவார்கள்.

கண்ணீர் மல்க வருவார்கள். கையில் மாலையை ஏந்திக்கொண்டு வருவார்கள். சிலர் ஒப்பாரி வைத்து சோகத்தை வெளிப்படுத்துவர். என் உறவுகளின் கையைப் பற்றிக் கொண்டு சிலர் அமைதியாய் ஆறுதல் சொல்லுவார்கள். அவ்வளவுதான் அவர்களால் முடியும். அதற்கு மேல் ஒன்றும் முடியாது. மரியாவுக்கும் இந்தத் தலத்தில் பெரிதாய் ஒன்றும் செய்துவிட முடியவில்லை. வழிந்தோடும் கண்ணீர் வழியாகத் தன் மகனைப் பார்க்கிறார். தந்தையின் சித்தத்தை நிறைவேற்றும் தன் மகனுக்கு உறுதுணையாய் உடனிருக்கிறார்.

ஆனால் என்னால் அப்படிச் சொல்ல முடியாதே. கடவுளின் திருவுளத்திற்கு ஏற்ப என் வாழ்க்கை அமைந்திருந்ததா என்பது ஒரு பெரிய கேள்விக்குறியாய் நிற்குமே. எனது குடும்பத்தின் மீது கொண்ட அதீதப் பாசத்தின் காரணமாக, அவர்களது பொருளாதாரச் செழிப்பிற்காக நான் வாங்கிய கையூடல், லஞ்சம் ஆகியவையும், என் குடும்பத்திற்கு எதிராகவே நான் செய்த முறை தவறிய மற்றும் எல்லைதாண்டிய செயல்கள் எல்லாம் இறைத் திருவுளத்துக்கு எதிராக செய்த பாவங்கள் அல்லவா? அவை எனக்கான விண்ணக உறவுகளைவிட்டு நான் விலகக் காரணமானவை அல்லவா? உலகத்தின் உறவுகள் என்னோடு வரமுடியாத அந்தத் தருணத்தில், விண்ணக உறவுகள் என்னை எதிர்கொள்ள வேண்டுமென்றால் இறைத்திருவுளம் எனது வாழ்வில் நிறைவேறியிருக்க வேண்டும். அப்படி வாழ்ந்தால் மட்டுமே "கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவர்." (மாற். 3:35) என்கிற கனிவான மொழியும், முறியாத உறவும் எனக்கு வாய்க்கும் என்பதை இத்தலம் எனக்குக் கற்பிக்கட்டும்.

செபம்

இயேசுவை பெற்றதால் மட்டுமல்ல, இறைத் திருவுளத்தை நிறைவேற்றியதால் அன்னையின் நிலைக்கு உயர்ந்த மரியே, தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றி, இயேசுவின் உறவினராகும் உரிமை பெற்று, வானக இன்பத்தில் பங்கு பெறுகிற அருளினைத் தாரும்.

இயேசுவின் சிலுவையை சுமக்க சீமோன் உதவுகிறான்

“இயேசுவின் சிலுவையைச் சுமக்கும்படி’ (மத். 27:32) சீரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் கட்டாயப்படுத்தப்படுகிறார். அவரும் சுமக்கிறார். ஒருநாள் வரும். ஓடி ஆடித் திரிந்த நான் ஒடுங்கிப் போய்க் கிடப்பேன். என்னைச் சுமக்க குறைந்த பட்சம் நான்கு பேர் தேவைப்படுவார்கள். “யார் உதவியும் எனக்குத் தேவை யில்லை” எனக் கூறி பிறரை உதாசீனப்படுத்தி வாழ்ந்து வந்த நான் அன்று உறைந்து போய் கிடப்பேன், ஒருவிரலைக்கூட அசைக்க முடியாமல். பிறர் உதவி இல்லாமல் வாழ்வது மட்டுமல்ல, இறுதிப் பயணம் மேற்கொள்வதுகூட இயலாத காரியம். இதுதான் நிஜம்; இது தான் யதார்த்தம்.

ஊர் ஊராய்ச் சுற்றி வந்து உண்மையை எடுத்துரைத்தவருக்கே உதவி செய்ய ஆளில்லை. சென்ற இடமெல்லாம் நன்மை செய்தவருக்கே நன்றி சொல்ல எவரும் இல்லை. தேடி வந்த தெய்வத்திற்கே தேற்றும் கரம் ஒன்றும் நீளவில்லை. இறை மகனுக்கே இந்நிலை என்றால் என் நிலையை எண்ணிப் பார்க்கவே அச்சமாக உள்ளது. “நான் உண்டு, என் வேலை உண்டு” என ஒதுங்கிச் செல்வதுதான் புத்திசாலித்தனம், விவேகம் என்பது எழுதப்படாத நியதி ஆகிவிட்ட இக்காலத்தில் கொஞ்சநஞ்சம் ஈரம் இன்னும் மிச்சமிருக்கிறது என்பதை எண்பிக்கும் ஒரே இடம் இழவு வீடுதான். அங்குதான் கேட்காமல்கூட சில உதவிகள் தாராளமாய்ச் செய்யப்படுகின்றன.

ஆனால், அங்குகூட சிலரைச் சுமக்க கரங்கள் பல நீளும்; பெட்டியைச் சுமக்கப் போட்டியும் இருக்கும். வேறு சிலருக்கு அந்தப் பாக்கியமும் வாய்ப்பதில்லை. ஆட்களைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும். எனது வாழ்வு, பிறரை நன்முறையில் பாதித்ததா, அவர்கள் வாழ்வில்

நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியதா என்பதை உணர்த்துகிற தருணம் அது. வாக்குவாதங்களை வென்று விரோதிகளை சம்பாதித்தேனா, சண்டைகளை வென்று எதிரிகளை சம்பாதித்தேனா, இல்லை பகைமையை வென்று நண்பர்களை சம்பாதித்தேனா என்பது அப்போது தெரிந்து விடும்.

எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தேன் என்பதில் அல்ல வாழ்க்கையின் அர்த்தம். எத்தனை பேர் கண்ணீரைத் துடைத்தேன் என்பதில்தான் வாழ்க்கையின் பொருளே அடங்கியுள்ளது. "ஒரு கிண்ணம் தண்ணீர் கொடுப்பவர்கூட கைம்மாறு பெறாமல் போகார்" (மாற். 9:41) என்கிற உண்மையைப் புரிந்துகொள்ள இந்தத் தலம் எனக்கு உதவட்டும்.

செபம்

உதவுவதன் மகத்துவத்தை உணர்த்த சீமோனின் உதவியை ஏற்ற இயேசுவே, கைம்மாறு கருதாமல் செய்கிற உதவியை உலகம் சில வேளை மறந்தாலும், மாறாத தெய்வம் நீர் மகிழ்வோடு நினைவு கூர்ந்து கைம்மாறு தருவதால், உதவுகிற உயர்ந்த உள்ளத்தை எனக்குத் தந்தருளும்.

◆

✦ **ஆறாம் நிலை**

வெரோனிக்கா இயேசுவின் திருமுகத்தைத் துடைக்கிறார்

கலங்கிய நெஞ்சங்களுக்கு கலங்கரை விளக்காய் ஒளிர்ந்த இயேசுவின் திருமுகம் இப்போது கறைபடிந்து காட்சி தருகிறது. கசிகின்ற இரத்தம் ஒருபுறம்; வடிகின்ற வியர்வை மறுபுறம். ஆனால் அதைக்கூடத் துடைத்துக்கொள்ள முடியாதபடி இயேசுவின் கரங்கள் துவண்டு போயிருந்தன. வெரோனிக்கா என்கிற வீரமங்கையின் ஈரமனம், ஒரு துணிகொண்டு உம்

கறைபடிந்தத் திருமுகத்தைத் துடைத்தது. ஒரு நாள் வரும். என் முகத்தை ஒட்டி வரும் ஈக்களைக்கூட விரட்ட முடியாதபடி என் கரங்கள் விரைத்துப் போயிருக்கும். செயலற்ற உடம்பாய் நான் செத்துப் போய் கிடப்பேன்.

இறுகிப்போன இதயங்கள்கூட, இறப்பு நேரிடும் போது, இரக்கம் காட்ட இறங்கி வருவது ஒரு ஆறுதல்தான். ஆனால் ஒருவர் உயிரோடு இருக்கும்போது, இந்த இரக்கம் ஏன் இல்லாமல் போய்விடுகிறது? பிறரது துன்பங்களைப் பார்த்த பின்பும் பாராமுகமாய் போவதும், இன்னலில் தவிப்போருக்கு இம்மியும் உதவாமல் இருப்பதும் ஒரு தவறாகவே தோன்றுவதில்லையே. நான் என்ன செய்ய முடியும் என நான் ஒதுங்கிப் போனத் தருணங்கள் எத்தனை? வீழ்ந்துபோன சிலரது வாழ்க்கையைப் பற்றி விமர்சனம் செய்துவிட்டு வாழாவிருந்த வேளைகள் எத்தனை?

அல்லல்படுவோருக்காக நான் அதிகபட்சம் செய்தது 'ஐயோ பாவம்' என்று சொன்னதுதான். இரங்குகிற மனம் ஏன் எனக்கு இயற்கையாகவே வருவதில்லை? அப்படியே வந்தாலும் அது இரக்கச் செயல்களாய் ஏன் மாறுவதில்லை? பிறரது கண்ணீரைத் துடைக்க, காயங்களை ஆற்ற, வேதனையை தணிக்க நீளாத என் கரங்கள் நீட்டமுடியாதபடி நிரந்தரமாய் முடங்கிப்போய்விடும் என் மரணத்தில். அப்போது பிறரது தயவும் இரக்கமும், அதைவிட அதிகமாய் இறைவனின் இரக்கம் எனக்குத் தேவைப்படும். அந்த அகால வேளையில் ஆண்டவரின் இரக்கத்தைப் பெறுவேனா என்பது, வாழ்கிற போது, நான் பிறருக்கு இரக்கம் காட்டினேனா என்பதைப் பொறுத்ததே. ஏனென்றால் "இரக்கமுடையோர் பேறுபெற்றோரே. ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" (மத். 5:7) என்பது தானே இயேசுவின் திருமொழி. அந்தத் திருமொழி எனதாகிட உயிருடன் இருக்கும் போதே இரக்கம் காட்டுதல் இன்றியமையாதது என்கிற உண்மையை இத்தலம் எனக்குக் கற்பிக்கட்டும்.

செபம்

இரக்கச் செயல் இறைவனின் முகத்தை மலரச் செய்திடும் என்பதை வெரோனிக்கா மூலம் உணர்த்திய இயேசுவே, இரங்குகிற இதயத்தோடு, ஈகைச் செயல்களில் ஈடுபட்டு, இறுதிநாளில், இறைவனின் இரக்கத்தை அனுபவிக்கிற இனிய வரத்தை எனக்குத் தந்தருளும்.

◆

✦ **ஏழாம் நிலை**

இயேசு இரண்டாம் முறையாகத் தரையில் விழுகிறார்

இறைமகன் விழுவது இழுக்கு; இரண்டாம் முறை விழுவது அதனினும் இழுக்கு. ஆயினும் விழுந்தார் இயேசு இரண்டாம் முறையாக; மண்ணில் கிடந்தார் மாண்பிழந்து. ஒரு நாள் வரும். வீட்டின் முற்றத்தில் கிடத்தப்பட்ட என்னைச் சுமந்து வந்து ஆலய பீடத்தின் முன்பு கிடத்துவார்கள். இறந்த என் உடல் இரண்டாம் முறையாக இறக்கப்படும்.

வீட்டிற்கு வந்து அஞ்சலி செலுத்த முடியாத பலர், அடித்துப் பிடித்து, ஆலயம் வந்து என்னை வழியனுப்ப வருவார்கள். "என் வீட்டு வாசற்படியை மிதிக்காதே; செத்தாலும் என் முகத்தில் முழிக்காதே! உன்னை தலை முழுகி விட்டேன்; இனி உனக்கும் எனக்கும் எந்தவிதமான ஒட்டும் உறவும் இல்லை" - இது போன்ற எத்தனை சூடான வார்த்தைகளை சர்வ சாதாரணமாய் சொல்லியிருக்கிறேன். பகைமை பாராட்டி, வெறுப்பின் உச்சத்திற்குச் சென்று உஷ்ணமான வார்த்தைகளைப் பேசிய நான் சிலரது குற்றங்களை மன்னிக்கவும் இல்லை; மறக்கவும் இல்லை.

அப்படி என்னால் மன்னிக்கப்படாத பலர், வீட்டிற்கு வரத் தயங்கி, ஆலயம் வருவர். என்னால் விரட்டப்பட்ட மகனாய், மகளாய் இருக்கக்கூடும்; 'நெருங்காதே' என நான் துரத்திய நண்பராய் இருக்கக்கூடும். அவர்கள் எல்லோரும்

பகைமையை மறந்து எனக்குப் பிரியாவிடை தர கோவிலுக்கு வருவார்கள். அவர்கள் என் கடுஞ்சொற்களை மன்னித்து, மறந்து, மனிதாபிமானத்தோடு மரணமடைந்த என்னைக் கழிவிரக்கத்தோடு கண்ணோக்குவார்கள். ஆனால், என்ன பரிதாபம்! நான்தான் அவர்களை மன்னிக்காமலேயே போய்ச் சேர்ந்திருப்பேன். இப்போது மன்னிக்க நினைத்தாலும், மன்னிக்க முடியாமல் மரணத்தின் பிடியில் மாட்டியிருப்பேன்.

இரண்டாம் முறை விழுந்த இயேசு, யாரையும் இழிவாகப் பேசவில்லை; கடுஞ்சொற்களால் காயப்படுத்தவில்லை; வசைபாடி சபிக்கவுமில்லை. "செய்வதறியாது செய்கிறார்கள்" என அவர்களையும் மன்னித்து அவர்களுக்காகவும் ஜெபித்தார். அதனால்தான் அவரது 'விழுதல்' கூட நினைவு கூறப்படுகிறது. நானோ பகைமையென்னும் புழுதியில் விழுந்து, மன்னிக்க முடியாமல் மண்ணில் விழுந்து எழமுடியாமல் தவிக்கிறேன். "மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள்" (லூக். 6:37) என்ற இயேசுவின் மொழி கேட்டு, இம்மண்ணில் பிறரை மன்னித்தால்தான், விண்ணில் என் பாவங்கள் மன்னிக்கப்பட்டு, நான் ஏற்றுக் கொள்ளப்படுவேன் என்கிற உண்மையை இந்தத் தலம் எனக்கு உணர்த்தட்டும்.

செபம்

புழுதியில் விழுந்தாலும் பகைமையில் விழாத இயேசுவே, வெறுப்பென்னும் வெம்மையைத் தணித்து, மன்னிப்பு என்கிற தைலத்தைப் பூசி, மாண்புடன் வாழவும், மரித்தபின் உம் மடியில் தவழவும் அருள்தாரும்.

◆

✦ **எட்டாம் நிலை**

எருசலேம் மகளிருக்கு இயேசு ஆறுதல் தருகிறார்

வழியோரம் நின்றிருந்த மகளிர் விழிநீர் சிந்திய காட்சி எனக்கு நேரிடப்போகும் ஒரு நிகழ்வை மனக்கண்முன்

கொண்டு வருகிறது. ஆலயத்தில் கிடத்தப்பட்டிருந்த என்னைக் கல்லறை நோக்கி எடுத்துச் செல்வர். வழிநெடுக பூச்சொறிவர். கூடவே கண்ணீரும் சொறிவர். நானோ கடவுளின் மன்றத்தில் தீர்ப்புக்காகக் காத்திருப்பேன். அங்கே எனக்காக சிந்தப்படும் கண்ணீருக்கு மதிப்பிருக்காது. நான் பாவத்திற்காக மனம் வருந்தி வடித்த கண்ணீருக்குத்தான் மதிப்பிருக்கும்.

இயேசுவே! உம்மைப் பார்த்துக் கண்ணீர் வடித்த பெண்கள் பக்கம் திரும்பி உம்மால் ஆறுதலும் அறிவுரையும் நல்க முடிந்தது. என்னால் எதுவும் செய்ய முடியாது. என் மனைவிக்கோ, கணவனுக்கோ பிள்ளைகளுக்கோகூட ஆறுதல் சொல்ல முடியாது. நான் உயிருடன் இருந்தபோது, எத்தனை முறை, நான் அவர்களைக் கனிவுடன் பார்ப்பேன், புரிதலுடன் நடந்து கொள்வேன் என்று எதிர்பார்த்திருப்பார்கள். நானோ கடின இதயத்துடனும் கடுகடுப்பான முகத்துடனுமே வாழ்ந்து விட்டேன். இப்போது அவர்களுடன் சில வார்த்தைகள் கனிவுடன் பேசி, ஆறுதல் அளித்து, திடப்படுத்த ஆசைப்படுகிறேன். ஆனால் காலம் கடந்துவிட்டது.

உணர்ச்சியின் வெளிப்பாடாய் உதிர்க்கப்படும் கண்ணீர் இயற்கையானது. உள்ளார்ந்த அன்போடும், உருப்படியான எண்ணத்தோடும் சிந்தப்படும் கண்ணீர்தான் உத்தமமானது, உன்னதமானது. "இவர் செய்த பல பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஏனெனில், இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார்" (லூக். 7:47) என்கிற வார்த்தைகள் இயேசுவே உதிர்த்த வை.

என் வாழ்நாளில், எப்போதாவது, என் பாவத்திற்காக மனம் வருந்தி கண்ணீர் வடித்திருக்கிறேனா? என் கடமைகளைக் குறித்து மனம் கசிந்து அழுதிருக்கிறேனா? நான் காயப்படுத்தியவர்களிடம் நெஞ்சுருக மன்னிப்பு கேட்டிருக்கிறேனா? இவ்வளவு ஏன்? கடவுளிடம் கூட மன்னிப்புக் கேட்காத கல்நெஞ்சம் கொண்டிருந்தேன். ஒப்புரவு அருட்சாதனத்தைக்கூட அர்த்தமற்றது என அசட்டை

செய்திருக்கிறேன். பயனற்றது எனப் பாவசங்கீர்த்தனத்தை புறந்தள்ளியிருக்கிறேன். வீணான கேள்விகளையும், விதண்டாவாதங்களையும், செய்வதற்குப் பதிலாக நல்ல பாவசங்கீர்த்தனம் செய்திருந்தால் என் தலையெழுத்தே மாறியிருக்குமே. "உம் பாவங்கள் மன்னிக்கப்பட்டன... அமைதியுடன் செல்க" (லூக். 7:48, 50) என்கிற அருளுரையை கேட்கின்றபேறும், மரணத்திற்குப் பின் ஆண்டவருக்கு அருகே அமருகின்ற அருளும் ஒப்புரவு அருட்சாதனத்தில் எனக்குக் கிட்டும் என்பதையும், மரணத்திற்குப் பின் வடிக்கும் கண்ணீரைவிட, வாழும்போது மனம் வருந்தி வடிக்கும் கண்ணீருக்குத்தான் ஆற்றல் அதிகம் என்பதையும் இந்தத் தலம் எனக்குக் கற்பிக்கட்டும்.

செபம்

எருசலேம் மகளிருக்கு அவர்களது பாவங்களை நினைவூட்டிய இயேசுவே, மனம் நொந்து அழுதிடவும், மனம் மாறி வாழ்ந்திடவும், மன்னிப்பின் அருட்சாதனத்தை மண்டியிட்டு அணுகிடவும், அதன் வழியாய் மறுஉலக வாழ்வுக்கு தகுதி பெற்றிடவும் அருள் தந்து ஆசீர்வதியும்.

◆

✦ **ஒன்பதாம் நிலை**

இயேசு மூன்றாம் முறையாக கீழே விழுகிறார்

மூன்றாவது முறையாக மண்மீது நீர் விழுந்தீர். விழுந்திருக்கும் உம்மைப் பார்க்கையில் என் விழிகளில் வருவதோ இன்னொரு காட்சி. முதல்முறை வீட்டிலும், இரண்டாம் முறை ஆலயத்திலும் கிடத்தப்பட்டிருந்த நான், மூன்றாம் முறையாக, இல்லையில்லை கடைசி முறையாக, இன்னொரு இடத்தில் கிடத்தப்படுவேன் - எனக்காக வெட்டப்பட்ட கல்லறைக்கு அருகில்.

இவ்வுலக வாழ்க்கையின் இறுதிக்காட்சிகள் நிறைவேறத் தொடங்கும். என்னை அன்புசெய்த உள்ளங்கள் ஏக்கத்தோடு நிற்கும். கல்லறையில் அவர்கள் எழுப்பும் கதறல்களையும் தாண்டி ஒரு கனிவான குரலை நான் கேட்பேன். மூன்றுமுறை மறுதலித்த பேதுருவிடம் பேசிய அதே குரல் என்னிடமும் பேசும். என் தந்தையின் பெயரோடு என் பெயரையும் சேர்த்துச் சொல்லி "உனக்கு என்னிடம் அன்பு உண்டா?" (யோவா. 21:17) என்கிற கேள்வி கேட்கப்படும். "ஆண்டவரே, உமக்கு எல்லாம் தெரியுமே! எனக்கு உம்மீது அன்பு உண்டு என்பது நீர் அறியாத ஒன்றா?" (யோவா. 21:17) என்று என்னால் சொல்லக்கூடுமா? அது நான் எப்படி வாழ்ந்தேன் என்பதைப் பொறுத்தது.

அன்பு புனிதமானது; அன்புக்கு எல்லையில்லை; முடிவும் இல்லை. ஆனால் வாழ்க்கைக்கு முடிவு உண்டே! உறவுகளோடு இவ்வுலகில் வாழ்ந்து பழகிய நான் அந்த உறவுகளைத் தொலைத்துவிட்டு செல்லுகிற தருணம் அது. அந்தத் தருணத்தில் நிலையில்லா உலகையும், நிஜமில்லா உறவுகளையும் கடந்து, நிரந்தரமான நிஜமான உறவிலே நான் கலந்திட வேண்டும். அப்படிக் கலந்திட வேண்டும் என்றால் என் அன்பு கலப்படமில்லா அன்பாக, எதிர்பார்ப்புகள் இல்லா அன்பாக, கணக்குப்பார்த்துக் காட்டுகிற அன்பாக இல்லாமல் இருந்திருக்க வேண்டும்.

உண்மையான அன்பின் ஊற்றுக்கண்ணாகிய கடவுளை முழு இதயத்தோடும், முழு ஆற்றலோடும், முழு ஆன்மாவோடும் அன்பு கூர்ந்திருக்க வேண்டும். அப்போது அடுத்திருப்போர் மீதும் தூய்மையான அன்பு காட்டியிருப்பேன். என் இளமையின்போது உடல் களிப்புக்குப் பிறரைப் பயன்படுத்தியோ, பிறரது முதுமையின் போது அவர்களை உதாசீனப்படுத்தியோ வாழ்ந்திருக்க மாட்டேன். "தூய அன்பு அனைத்தையும் பொறுத்துக் கொள்ளும்" (1.கொரி. 13:7). அனைவரையும் அரவணைத்துச் செல்லும். அந்த அன்புதான்

என்னை இறுதிநாளில் இறைவனின் அரவணைப்பில் கொண்டு சேர்க்கும் என்பதை இந்தத் தலம் எனக்கு உணர்த்தட்டும்.

செபம்

மும்முறை விழுந்தாலும், முழுமையாய்த் தந்தையை அன்பு செய்த இயேசுவே, அன்பின் முழுமையாய்த் திகழும் கடவுளை முழுமனதோடு அன்பு கூர்ந்திடவும், அவர் பொருட்டு பிறரை அன்பு செய்யவும், அதன் வழியாக அன்பின் அரசில் ஒருநாள் இணையவும் அருள்தாரும் இயேசுவே.

◆

✦ **பத்தாம் நிலை**

இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்

மேலிருந்து கீழ்வரை தையலே இல்லாமல் நெய்யப்பட்டிருந்த அங்கியையும் அவர்களே எடுத்துக்கொண்டார்கள் (யோவா. 19:23) என்கிற மறை நூல் வாக்கு நிறைவேறுகின்ற இத்தலத்தில் ஒரு காட்சி என் கண்முன் நிழலாடுகிறது. அனைத்தையும் துறந்தவராய் நீர் அன்று நின்றதுபோல், அனைத்தையும் இழந்து நான் இறுதிச்சடங்கைச் சந்திப்பேன். மதிப்புடையது என இந்த உலகம் கருதுவது அனைத்தும் என்னிடமிருந்து எடுக்கப்படும். கட்டிய துணியை மட்டும் விட்டுவிட்டு மற்ற அனைத்தையும் எடுத்து விடுவர். ஒன்றுமில்லாமல் வந்தேன்; ஒன்றுமில்லாமல் போவேன்.

அகிலத்தை ஆண்டாலும், ஆயிரம் தான் இருந்தாலும், பெரும் பதவி வகித்தாலும், பேர்புகழைப் பெற்றாலும், உயிர் பிரிந்தபின்தான் ஓர் உண்மை பலருக்குப் புரிகிறது. "என் தாயின் கருப்பையினின்று பிறந்த மேனியாய் யான் வந்தேன்; அங்கே திரும்புகையில் பிறந்த மேனியாய் யான் செல்வேன்" (யோபு. 1:21). ஆனால் இந்த இடைப்பட்ட காலத்தில்தான்

எத்தனை ஆக்கிரமிப்புகள், அதீத ஆதாயங்கள், அடங்காத ஆசைகள்! ஓய்வின்றி, உறக்கமின்றி, உறவுப் பரிமாற்றமின்றி, செல்வம் சேர்ப்பது மட்டுமே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதிய காலங்கள் எத்தனை? ஆபத்துக்குக்கூட உதவ மனமில்லாமல், அடுக்கி வைத்தப் பணக்கட்டுகளால் பலரது அழுகைக்குக் காரணமான காலங்கள் எத்தனை?

"வீண் எல்லாமே வீண்" (ச.உ.1:2) என்கிற விரக்தியை இந்தத் தலம் கற்பிக்கவில்லை. செல்வமும், பெயரும் புகழும் கடவுளுடைய ஆசீர்வாதங்கள் என விவிலியம் கூட சில இடங்களில் விவரிக்கிறது. செல்வத்தைப் பெருக்க வேண்டும் என்று கூட இயேசு பொற்காசு உவமையிலும், தாலந்து உவமையிலும் ஊக்குவிக்கிறார். ஆனால் சேர்ப்பதும் சேமிப்பதும் எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியம் மேலானவற்றிற்காக செல்வத்தையும், பெயரையும், புகழையும் பயன்படுத்துவது. வெறுங்கையோடு செல்வோம் என்று யார் சொன்னது? உயிர் வாழ்கையில் செய்த நற்காரியங்களும், சேமித்து வைத்த புண்ணியங்களும், நம்முடன் தான் வரப்போகின்றன. அவைதான் விண்ணக வாயிலின் திறவுகோல். ஆடையிழந்தவராய் இயேசு நின்றிருந்தாலும், தந்தையின் "அன்பார்ந்த மகனாய்" நிமிர்ந்தே நின்றார். அழியக் கூடிய மண்ணுலக செல்வத்தைக் கொண்டு "இற்றுப்போகாத பணப்பைகளையும், விண்ணுலகில் குறையாத செல்வத்தையும் (லூக். 12:33) தேடிக்கொள்கிற ஞானத்தை இத்தலம் எனக்குக் கற்பிக்கட்டும்.

செபம்

ஆடைகள் களையப்பட்டாலும் ஆண்டவருக்கு உகந்தவராய் தோற்றமளித்த இயேசுவே, அழிந்து போகும் செல்வத்தைக் கொண்டு, அன்புச் செயல்கள் புரிந்து, புண்ணியப் பாதையில் நடந்து, அருட்செல்வங்களைச் சேர்த்தவராய், உம்மை வந்தடையும் அருள் தாரும்.

◆

இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்

“மண்டை ஓடு எனப்படும் இடத்திற்கு வந்ததும், அங்கே அவரை.. சிலுவையில் அறைந்தார்கள்” (லூக். 23:33) அணைக்கும் கரங்களிலே ஆணிகளா சுவாமி! நினைத்துப் பார்க்கையிலே நெஞ்சம் உருகுதையா என உடைந்து போகும் ஒரு தலம் இது. உம் கைகளையும் கால்களையும் துளைத்து அறையப்பட்ட ஆணிகளின் சத்தம் எனக்கு ஒன்றை ஞாபகப்படுத்துகிறது. ஒருநாள் வரும். என்னைப் பொதிந்து வைத்திருக்கும் சவப்பெட்டியையும் ஆணிகளால் அறைந்து மூடிவிடுவார்கள்.

ஆனால் அதற்கும் முன்னதாக வெட்டியானின் குரல் ஈரமின்றி ஒலிக்கும் “மொகத்த கடைசியா ஒரு தடவ பார்க்கிறவங்கள்லாம் பாத்துக்குங்க.” முடிந்தது, அத்தோடு எல்லாம் முடிந்தது. அதற்குப் பிறகு ஒலிக்கப்போவது அந்த ஆணிகளை இறுக்கும் சத்தம்தான். உயிரோடு இருந்த நாட்களில் நான் ஆடாத ஆட்டமா? போடாத சத்தமா? “யாருன்னு நெனச்ச? என்பதில் தொடங்கி “கைய வச்சுப்பாரு. உசுரோட விட மாட்டேன்” என்றெல்லாம் திமிறிய நேரங்கள்தான் எத்தனை எத்தனை?

“என்னைக் கேள்வி கேட்க நீங்கள் யார்? என்னை அடக்கி வைக்க உங்களுக்கென்ன அதிகாரம்” என்றெல்லாம் வயது வித்தியாசம் பார்க்காமல் செய்த களேபரங்கள் எல்லாம் அப்போது காணாமல் போயிருக்கும். சப்தநாடிகளும் அடங்கிப் போய் ஒரு சவப்பெட்டிக்குள் நான் அடங்கிப் போயிருப்பேன். “அவளை அடக்க ஒருவராலும் முடியாது” என எல்லோரும் அஞ்சி ஓடிய நபருக்கும் அதே கதிதான்.

“உயிரைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு; அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவும் அதிகாரம் உண்டு” (யோவா. 10:18) என்ற இயேசு தம் கரங்களை விரித்துக்

கொடுத்தார். நாம் விடுதலை பெற அவர் தம் சுதந்திரத்தையும், சக்தியையும், சற்றே ஒதுக்கிவிட்டு மரச் சட்டத்துக்குள் அடங்கிப் போகிறார். ஆனால் நானோ யாரையும் மதிக்காமல், எதற்கும் அஞ்சாமல், கண்போன போக்கிலும் கால் போன போக்கிலும் என் வாழ்க்கையைக் கடத்திவிட்டேன். "இரு கையுடையவராய்... இருகாலுடையவராய்... இரு கண்ணுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதைவிட ஊனமுற்றவராய்... ஒற்றைக் கண்ணராய் நிலைவாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது." (மாற்கு. 9:43-47) என்கிற இயேசுவின் எச்சரிக்கை மொழி இந்தத் தலத்தில் என் நினைவிற்கு வரட்டும். ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந்த வாழ்க்கை தான் என்னைச் சவப்பெட்டியிலிருந்து, சர்வ வல்லவரின் நிழலுக்கு அழைத்துச் செல்லும் என்கிற உண்மையை இந்தத் தலம் எனக்குக் கற்பிக்கட்டும்.

செபம்

பாவத்திற்கும், சாபத்திற்கும், நித்திய மரணத்திற்கும் நாங்கள் அடிமையாகாதிருக்க, உம்மையே சிலுவையிலே அறையப்பட கையளித்த இயேசுவே! அழிவுக்குத் தள்ளும் இச்சைகளிலிருந்து என் உடலை வென்றெடுத்து, நிலை வாழ்வுக்கு வந்து சேரும் நல்வரத்தை எனக்குத் தாரும்.

✦ **பன்னிரண்டாம் நிலை**

இயேசு உயிர் துறக்கிறார்

"நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும் போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்" (யோவா. 12 :32) என்றுரைத்த இயேசு, சிலுவையிலே அறையப்பட்டவராய் மண்ணிலிருந்து உயர்த்தப்படுகிறார். ஆனால் நானோ சவப்பெட்டிக்குள் அறையப்பட்டவனாய் மண்ணுக்குள் இறக்கப்படுவேன். அவரோ அனைவரையும் அவர்பால் ஈர்த்துக்கொள்வார். நானோ அனைவரிடமிருந்தும் பிரிக்கப்படுவேன். அவர் அனைவரும் காணும் பொருட்டு உயர்த்தப்பட்டார். நானோ, யாரும் காண முடியாதபடி இறக்கப்படுவேன்.

அறையப்பட்ட சிலுவையில் இயேசு இருந்தது சில மணித்துளிகள்தான். அடைக்கப்பட்டப் பெட்டிக்குள் நான் இருக்கப் போவதும் சில நாட்களோ, வாரங்கள் தான். உடலுக்கு என்ன நேருகிறது என்பதல்ல காரியம். எரிக்கப்பட்டேனா, அடக்கம் பண்ணப்பட்டேனா, மண்ணானேனா, சாம்பலானேனா என்பதல்ல முக்கியம். மரணத்திற்குப் பின் எங்கே போகிறேன், யாரிடம் சரணாகதி ஆகிறேன் என்பது தான் முக்கியம்.

"தந்தையே உம் கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன் என இயேசு சொல்லமுடிந்ததென்றால், அதற்கு முன் "எல்லாம் நிறைவேறிற்று" என சொல்ல முடிந்தது. என்னால் அப்படிச் சொல்ல முடியுமா? எந்த ஒரு நோக்கத்திற்காக மண்ணுக்கு அனுப்பப்பட்டாரோ, அந்த நோக்கத்தைச் செவ்வனே ஆற்றியவராய் சிலுவையிலும் சிலாகிக்கிறார் இயேசு. எந்த நோக்கத்திற்காக கடவுள் என்னை மண்ணில் பிறக்கச் செய்தாரோ, அந்தக் கடமையை நான் ஆற்றினேனா என்பதை நினைத்தாலே நெஞ்சம் பதைக்கிறது.

எனது தனிநபர் கடமைகளை, குடும்பக் கடமைகளை, சமூகக் கடமைகளை நான் சரிவர நிறைவேற்றினேனா? ஒரு நாட்டின் குடிமகனாகவும், கத்தோலிக்கத் திருஅவையின் உறுப்பினனாகவும் என் கடமைகளை எப்படி ஆற்றினேன் என்று நினைக்கும்போது வருத்தம் தான் மிஞ்சுகிறது. என் உயிரைக் காக்கவும், உடல்சார் ஆசைகளைத் தீர்க்கவும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் என் கிறித்தவப் பெயரைக்கூட மறைக்கவும் மாற்றவும் நான் தயங்கியதில்லை. 'தம் உயிரைக் காத்துக்கொள்ள விரும்பும் எவரும் அதை இழந்து விடுவர். மாறாக என் பொருட்டுத் தம்மையே அழித்துக் கொள்கிற எவரும் வாழ்வடைவர்" (மத். 16:25) என்கிற உம் வார்த்தைகள் என்னை எச்சரிக்கட்டும். கடவுளுக்காகவும், கடவுளின் நோக்கம் நிறைவேறும் பொருட்டும் வாழப்படுகிற வாழ்க்கை மண்ணில் முடிவதில்லை, விண்ணில் தொடரும் என்பதை இந்தத் தலம் எனக்கு உணர்த்தட்டும்.

செபம்

உம் மரணத்தால் எங்களுக்கு நிலை வாழ்வின் வா யிலைத் திறந்து விட்ட இயேசுவே, உமக்காகவே வாழ்ந்து, உம்மிலே வாழ்ந்து, உமக்காகவே வீழ்ந்து, உம்மிலே மடிந்து நிலைவாழ்வை அடைகின்ற நிலைப்பேற்றினை எனக்குத் தாரும்.

◆

✦ **பதின்மூன்றாம் நிலை**

தாய் மரியாவின் மடியில் இயேசுவைக் கிடத்துகிறார்கள்

கன்னியான அவர் மடியில் நீர் தவழப் போகிறீர் என்று அறிந்தபோது "இது எங்ஙனம் ஆகும்" என்று வியந்த மரியா, மரித்த உம் சடலத்தைச் சுமந்த போது, "இது எப்படி நிகழ்ந்தது?" எனப் பதறிப் போகிறார். அமைதி உள்ளத்தோடு அனைத்தையும் ஏற்கத் தெரிந்த அந்தத் தாயின் மடி உம்மைச் சுமக்கிறது. என்னையோ பூமித்தாயின் மடி சுமக்கும். இறக்கப்பட்ட பெட்டியின் இருபுறமுமிருந்து கயிறுகள் இழுக்கப்படும். என்னை நேசித்த எல்லோரும் ஒருபிடி மண்ணையோ கைநிறைய மலரையோ அள்ளி வீசுவார்கள். அதன் பின்னர் அந்தக் குழியை மூடும் அனைத்துப் பணிகளும் வேகமாய் நடைபெறும். எனக்குப் பிரியாவிடை கொடுத்தத் துயரில் அனைவரும் கலைந்து செல்வார்கள். உம் தாயின் மடியில் நீர் கிடந்தது போல, மண்ணின் மடியில் நான் மட்டும் மவுனமாய் இருப்பேன்.

உம் தாயின் மடி என்பது உமக்கு நிரந்தரமான இடம் இல்லை. அங்கிருந்து நீர் தந்தையின் வலப்புறத்திற்குச் சென்றதை நாங்கள் அறிவோம். எனக்கும்கூட பூமித்தாயின் மடி நிரந்தரமல்ல. அதற்குப்பின் எந்த மடி என்னைச் சுமக்கப்

போகிறது என்பதுதான் கேள்வி. "வான தூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு சேர்த்தார்கள்" (லூக். 16:22) என ஏழை இலாசரைக் குறித்துச் சொல்லும் நற்செய்தி "செல்வரும் இறந்தார். அவர் அடக்கம் செய்யப்பட்டார் அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்டார்" (லூக். 16:22) எனவும் குறிப்பிடுகிறது.

எந்த மடி எனக்காகக் காத்திருக்கிறது என்பது நான் எப்படி வாழ்ந்தேன் என்பதைப் பொறுத்துத்தான் அமையும். வீட்டு வாயிலில் இருந்த ஏழைமீது கூட பரிவு காட்ட முடியாத பணக்காரனைப் போலவே நானும் வாழ்ந்தால் பாதாளத்தின் பிடியில் தான் உழல்வேன். பசித்தோரில் உம்மைக்கண்டு உணவு கொடுத்தால், தாகத்தால் தவிப்போரில் உம்மைக்கண்டு குடிக்கத் தண்ணீர் கொடுத்தால், ஆடையின்றி தவிப்போரில் உம்மைக்கண்டு ஆடைகொடுத்தால், உறைவிடமின்றி தவிப்போரில் உம்மைக்கண்டு அவர்களுக்கு உறைவிடம் கொடுத்தால், தனித்திருப்போர், நோயுற்றோர், சிறைப்பட்டோர் ஆகியவரில் உம்மைக்கண்டு உடனிருந்து சேவை புரிந்தால் "மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத் 25:40) என்கிற ஆசிமொழியை நான் கேட்க முடியும் என்பதை உணர்ந்திட, இந்தத் தலம் எனக்கு உதவட்டும்.

செபம்

தரணியைக் காக்கத் தாயின் மடியில் தவழும் இயேசுவே, உம்மைப் போலவும், மிகவும் இரக்கமுள்ள உம் அன்னையைப் போலவும் இரக்கம் மிகுந்தவர்களாய் இவ்வுலகில் வாழ்ந்து, அறச்செயல்களால் உம்மை வந்தடையும் அருள்தாரும்.

◆

இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கிறார்கள்

இயேசுவின் திருவுடலை "யோசேப்பு... பெற்று, தூய்மையான மெல்லிய துணியால் சுற்றி, தமக்கெனப் பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் கொண்டு போய் வைத்தார்; அதன் வாயிலில் ஒரு பெருங்கல்லை உருட்டி வைத்துவிட்டுப் போனார்." (மத். 27: 59,60) உம் அடக்க நிகழ்வு எனக்கு ஒன்றை ஞாபகப்படுகிறது. எனது நல்லடக்கம் முடிந்த சில நாட்களிலோ, வாரங்களிலோ அல்லது மாதங்களிலோ, நான் புதைக்கப்பட்ட இடத்தில் கல்லறை ஒன்று கட்டப்படும். அது பளிங்கினால் ஆன பகட்டான கல்லறையாகவோ, கிரானைட் கற்களாலான கண்கவர் கல்லறையாகவோ அல்லது சாதாரண ஒரு கல்லறையாகவோ இருக்கலாம். சிலருக்கு அந்த பாக்கியம்கூட கிட்டாமல் மண்மேடாக சில நாட்கள் இருந்து, எல்லோராலும் மிதிபடும் கல்லறையாகவும் அமைந்திடக் கூடும்.

எனக்காக எழுப்பப்பட்டக் கல்லறையில் சில வாசகங்களும் எழுதப்பட்டிருக்கும். அவை எவ்வளவு தூரம் நிஜமாக இருக்கும் என்பதெல்லாம் உமக்குத்தான் வெளிச்சம். ஆனால் இவை ஒன்றும் எனக்கு எந்தப் பயனும் தரப்போவதில்லை. நான் மகிழ வேண்டுமென்றால் அதற்கு ஒரே வழிதான் உண்டு. "உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்" (லூக். 10:20) என்று நீரே சொன்னது போல, எங்கள் பெயர்கள் வாழ்வின் நூலில் எழுதப்பட்டுள்ளனவா என்பதுதான் அதிமுக்கியம்.

சாதனையாளர்கள் பட்டியலில் என் பெயர் இடம் பெற வேண்டும், வெற்றியாளர்கள் வரிசையில் என் பெயர் பொறிக்கப்பட வேண்டும், சரித்திரப் புத்தகத்தில் நான் இடம் பெற வேண்டும் என்கிற ஆசையோடு, வாழ்நாளெல்லாம்

ஓடுகின்ற நான் கடைசியில் வந்து சேரப்போகும் இடத்தில் என் பெயர் இடம் பெற வேண்டும் என்பதில் அக்கறை செலுத்துவதே இல்லை. இந்த உலகிலேயே அதிகம் வணங்கப்படும் கல்லறை ஒன்று உண்டென்றால் அது உம்முடைய கல்லறைதான். பளிங்குக் கற்களோ, கிரானைட் கற்களோ அதனை அலங்கரிக்கவில்லை. ஒரு பெயர்ப் பலகையோ, இறுதி வசனமோ, நினைவிடமும் அங்கு இல்லை. இன்னும் சொல்லப் போனால் அது ஒரு "வெறுமையான கல்லறை." ஆனால் அந்த வெறுமையான கல்லறைதான் மனிதக்குல மீட்புக்கே காரணம் ஆயிற்று.

எப்படிப்பட்ட கல்லறையில் நான் துயில் கொள்ளப் போகிறேன் என்பதோ, அதில் என்னைப் பற்றி என்ன எழுதப்படப் போகிறது என்பதோ முக்கியமல்ல. விண்ணகத்தில் உள்ள வாழ்வின் நூலிலே என்னைப் பற்றி என்ன எழுதப்பட்டுள்ளது. அதில் என் பெயர் உள்ளதா என்பதுதான் முக்கியம் என்பதை உணர்த்தட்டும் இந்தத்தலம்.

செபம்

"நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின், திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துச் செல்வேன்" (யோவா. 14:3) என்று வாக்களித்தபின் உம் வாழ்க்கைப் பயணத்தை முடித்த இயேசுவே, வாழ்வின் நூலிலே எனது பெயர் இடம்பெறும் வண்ணம் என் வாழ்க்கையை அமைத்திட எனக்கு வரமருளும்.

முடிவுரை

நாம் கடந்து வந்த சிலுவைப்பாதையில் தியானித்த சிந்தனைகள் மரணத்தைக் குறித்த அச்சத்தை ஏற்படுத்திவிட்டதா? அப்படியென்றால் நீங்கள் இந்தச் சிலுவைப் பாதையையும் புரிந்து கொள்ளவில்லை; சிலுவை சுமந்த இயேசுவையும் புரிந்து கொள்ளவில்லை என்று தான் அர்த்தம். "மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்' என்கிற பாடலைப் பாடும் போதெல்லாம் "மரணம் வருவதை மனிதன்

அறிவானோ, தருணம் இதுவென இறைவன் அழைப்பானோ" என நெஞ்சுருகப் பாடும் நாம், பல சமயங்களில் அதன் கடைசி சரணத்தைப் பாடுவதில்லை. அந்தக் கடைசி சரணம் இதுதான்: "இறைவன் இயேசுவோ இறப்பைக் கடந்தவர்; அவரில் வாழ்பவன் இறந்தும் வாழ்கின்றான்" இதுதான் நம் விசுவாசம்; இதுதான் நம் நம்பிக்கையின் மறைபொருள். மரணத்தின் பாதையில் நமக்கு முன்பாக இயேசு பயணித்ததற்கு ஒரே ஒரு காரணம், நாமும் இந்தப் பாதையில் பயணிக்க வேண்டும், அவரைப்போலவே வெற்றியாளர்களாய் பயணிக்க வேண்டும் என்பதற்காகத்தான். "சாவே, உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?" (1. கொரி. 15:55) எனக் கொக்கரிக்கிற விசுவாசம் நம்முடைய விசுவாசம். கூடவே நமக்கு மற்றொரு உறுதிமொழி உண்டு. "எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதிநாளில் உயிர்த்தெழச் செய்வேன்" (யோவா. 6:54) என்பது, வாக்குத் தவறா ஆண்டவரின் அருள்வாக்கு. நற்கருணைப்பந்தியில் பங்கு பெறும் நாம் விண்ணகத் திருவிருந்திலும் நிச்சயம் பங்கு பெறுவோம் என்கிற உறுதியான நம்பிக்கையில் இயேசுவைப் போலவே வாழப் பழகிடுவோம்; பயணிக்கப் பழகுவோம். அப்போது அவரைப் போலவே மரணத்தின் பாதை கூட நமக்கு மாட்சியின் பாதையாய் அமைந்திடும்.

◆